ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1864/40 - 2014 මැයි මස 28 වැනි බදාදා - 2014.05.28

*1864/40 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

### செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இலங்கை சட்டவாக்கத்தின் அத்தியாயம் 423) கீழான அறிவித்தல்கள்

இலங்கை செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இலங்கை சட்டவாக்கத்தின் அத்தியாயம் 423) 7 மற்றும் 8 ஆம் பிரிவுகளின் நியதிகளின்கீழ் அனுமதி வழங்கப்படுகிறது.

2012, திசெம்பர் 20 ஆந் திகதி வெளியிடப்பட்ட இல. 1789/34 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் (அதிவிசேடமானது) பிரசுரிக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அறிவித்தல் திருத்தப்பட்டுள்ளது :

**1. பந்தி 2 இனை உடனடுத்து பின்வருவனவற்றினைச் சேர்ப்பதன் மூலம் :**

"2அ. தகுதியான நபர்கள் தனிநபர்களாக இருக்குமிடத்து கீழ்காணும் நபர்கள் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரிடம் பற்று அட்டையினை விண்ணப்பித்துப் பெறுவதற்கு தகுதியானவர்களாவர்.

(அ) வேலைக்காக அல்லது வியாபாரம் அல்லது தொழில்சார் நிபுணத்துவத்தை உருவாக்கிக் கொள்வதற்காக இலங்கைக்கு வெளியே சென்றுள்ள நபரினால், அவ்வகையான வேலை, வியாபாரம் அல்லது தொழிலினை பெறும்வரையான காலத்தில் ;

(ஆ) இலங்கைக்கு வெளியில் தமது நிரந்தர வதிவிடத்தினை ஏற்படுத்திக் கொண்டுள்ள வதிவற்றோர் தடுத்து வைக்கப்பட்ட கணக்கு அல்லது புலம்பெயர்ந்தோர் தடுத்து வைக்கப்பட்ட கணக்கினை ஆரம்பித்த இலங்கை குடியுரிமையுடைய நபர் ;

(இ) இராஜதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது இராஜதந்திர ரூபாக் கணக்கினை கொண்டிருப்பவர் ;

(ஈ) வதிவற்ற இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கினைக் கொண்டிருப்பவர் ;

(உ) வதியும் விருந்தினர் ரூபா நடைமுறைக் கணக்கினைக் கொண்டிருப்பவர் ;

(ஊ) மூத்த வெளிநாட்டு பிரசைகள் ரூபாக் கணக்கினைக் கொண்டிருப்பவர் ;

(எ) பிணையங்கள் முதலீட்டுக் கணக்கினைக் கொண்டிருப்பவர் ;

(ஏ) சிறப்பு முதலீட்டு வெளிநாட்டு வைப்புக் கணக்கினைக் கொண்டிருப்பவர் ;

(ஐ) பன்னாட்டுப் பணிகள் வழங்குவோருக்கும் அவர்களது ஊழியர்களுக்குமான வெளிநாட்டு நாணயக் கணக்கினைக் கொண்டிருக்கும் ஊழியர்".

(ஒ) வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கினைக் கொண்டிருப்பவர்;

**2. பந்தி 2அ இனை உடனடுத்து பின்வருவனவற்றை சேர்ப்பதன் மூலம் :**

"2அஅ. பந்தி 2 (அ) இல், (ஆ) தொடக்கம் (ஒ) வரையான விடயங்களின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள தனிநபருக்கு பற்று அட்டை வழங்கும் பொழுது, பற்று அட்டைகளை அத்தகைய கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள நிதிக்கு எதிராகவே வழங்குதல் வேண்டும்."

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

3. பந்தி 2 அஅ இனை உடனடுத்து பின்வருவனவற்றைச் சேர்ப்பதன் மூலம் :

"2அஆ. பந்தி 2 அ கீழ் பட்டியலிடப்பட்ட நபர்களுக்கு வழங்கப்பட்ட பற்று அட்டையின் பயன்பாடு கீழ்வரும் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(அ) இலங்கையில் வாழும் நபருக்கான கொடுப்பனவுகள் கட்டுப்பாடுகளின்றி அனுமதிக்கப்பட்டுள்ளது ;

(ஆ) பற்று அட்டைகள் பின்வருவோருக்கு வழங்கப்பட்டிருக்குமிடத்து மாத்திரம் கீழ்க்காணும் விடயங்களுக்கு இலங்கைக்கு வெளியிலுள்ள நபருக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

(i) இராஜதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்கினைக் கொண்டிருப்பவர் ;
(ii) வதிவற்ற இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கினைக் கொண்டிருப்பவர் ;
(iii) பிணையங்கள் முதலீட்டுக் கணக்கினைக் கொண்டிருப்பவர் ;
(iv) சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்கினைக் கொண்டிருப்பவர்.

(இ) பற்று அட்டை பின்வருவோருக்கு வழங்கப்பட்டிருக்குமிடத்து மாத்திரம் பற்று அட்டை மூலம் இலங்கைக்கு வெளியிலுள்ள நபருக்கு நடைமுறை பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்களுக்குக் கொடுப்பனவுகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

(i) பன்னாட்டு பணிகள் வழங்குவோருக்கும் அவர்களது ஊழியர்களுக்குமான வெளிநாட்டு நாணயக் கணக்குகளைக் கொண்டிருக்கும் ஊழியர் ;

(ii) வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கினைக் கொண்டிருப்பவர்;

(iii) வேலைக்காக அல்லது வியாபாரம் அல்லது தொழில்சார் நிபுணத்துவம் வாய்ந்த உருவாக்கிக் கொள்வதற்காக இலங்கைக்கு வெளியில் சென்றுள்ள நபரினால், அவ்வகையான வேலை, வியாபாரம் அல்லது தொழிலினைப் பெறும் வரையிலான காலத்தில்."

**4. பந்தி 3 இனை நீக்கி அதற்குப் பதிலாக கீழ்வரும் பந்தியினை இடுவதன் மூலம் :**

"3. பந்தி 2அ இன் விடயம் (அ) இன் கீழ் வழங்கப்பட்ட அட்டை நீங்கலாக, இலங்கையில் வதியும் ஒருவருக்கு வழங்கப்பட்ட இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையினை வைத்திருப்பவர் தொழிலின் பொருட்டு புலம்பெயரும் அல்லது இலங்கையை விட்டுச் செல்வதாக இருப்பின் அந்த அட்டையை வழங்கிய வங்கியிடம் கையளித்தல் வேண்டும்."

**5. பந்தி 3 இனை நீக்கி அதற்குப் பதிலாக கீழ்வரும் பந்தியினை இடுவதன் மூலம் :**

"3அ. அட்டை வைத்திருப்பவர் கொடுகடன் அட்டை அல்லது பற்று அட்டை மூலம் வெளிநாட்டு நாணயங்களை மீளப்பெறும் வேளையில், மீளப்பெறும் தொகையானது இவ்வனுமதியின் பகுதி 2 மற்றும் 2அஆ இன் விடயம் (இ) இல் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுக்கே பயன்படுத்தப்படும் என்பதற்கான சான்றினை வைத்திருத்தல் வேண்டும்."

**6. பந்தி 5 இனை நீக்கி அதற்குப் பதிலாக கீழ்வரும் பந்தியினை இடுவதன் மூலம் :**

**"5. சந்தர்ப்பம் வேறு விதத்தில் தேவைப்படுத்தினாலன்றி, இவ்வறிவித்தலின் நோக்கத்திற்காக ;**

(i) **"அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்"** என்பது, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் தரப்பட்டுள்ள அதே கருத்தைக் கொண்டிருக்கும்;

(ii) **"இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டை"** என்பது, பயன்படுத்துநர் கொடுகடன், பற்று அல்லது ஏதேனும் வடிவத்தில் பெறுமதிகளை மாற்றல் செய்வதினை இயலுமைப்படுத்தும் அட்டை அல்லது சாதனம் எனப் பொருள்படுவதுடன் கொடுகடன் அட்டை, பற்று அட்டை அட்டை மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட அட்டை என்பவற்றையும் உள்ளடக்குகின்றவிடத்து செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணைங்கிச் செல்லும் நோக்கங்களுக்காக கொடுக்கல்வாங்கல் விபரங்களினை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அடையாளங்கண்டு கொள்ளமுடியும் ;

(iii) **"பற்று அட்டை"** என்பது, அட்டை வைத்திருப்பவரின் கணக்கின் வரவு மீதியிலிருந்து நேரடியாகப் பற்று வைக்கப்படுவதன் மூலம், காசு மீளப்பெறல் அத்துடன்/அல்லது பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவுக்காக ஒழுங்குபடுத்தப்பட்ட மூன்றாம் தரப்பினருக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக பயன்படுத்தப்படக்கூடிய கொடுப்பனவு அட்டை என்று பொருளாகும்;

(iv) **"கடன் அட்டை"** என்பது, அட்டை வைத்திருப்பதற்கு வழங்குநரால் அளிக்கப்படும் தொடர் கொடுகடனுடன் தொடர்புபட்ட கொடுப்பனவு அட்டையொன்று என்பதுடன் அட்டை வைத்திருப்பவர் பயன்படுத்தப்பட்ட கடனை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் கொடுத்துத் தீர்க்கலாம். வழங்குநர் கடனின் ஏதேனும் தொகை குறித்துரைக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் முழுமையாகக் கொடுத்துத் தீர்க்கப்பட்டிருக்காவிடத்து அத்தொகையின் மீது வட்டி, அல்லது வேறு விதிப்பனவுகளை விதிக்கலாம்;

(v) **"தனிப்பட்டது"** என்பது அட்டை வைத்திருப்பவர் அவரது வாழ்க்கைத்துணை, பிள்ளைகள் மற்றும் அவரின் பெற்றோர் ஆகியோரின் பயன்பாட்டைக் குறிக்கும் என்பதுடன், எந்தவொரு வர்த்தக நோக்கங்களின் பயன்பாட்டையும் உள்ளடக்கமாட்டாது.

பி. எச். ஓ. சந்திரவன்ச,
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்.

கொழும்பு,
2014, மே 28.

6- 344

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.